DRAVIDA RANJANI.

திராவிட ரஞ்ஜனி.

புத். 1.] ஜனுவரி மீ 1887. [இல. 1.

CONTENTS.		அட்டவணை.	
Our aim	1	எமது கருத்து	1
Kambar	5	கம்பர் சரித்திரம்	5
Abstract Truth- Probodha Chandrodayam	11	"தத்துவ விசாரணை" பிரபோத சந்திரோதயம்	11
Mricchakatikam	12	மிருச்சகடிகம்	12
The Four Yugas	18	சதுர்யுகங்கள்	18
Five Domestic Rites	20	இல்லொழுக்கம்	20
Query	21	பதினெண்கணக்கு	21
Dr. Lundy on the Eye	22	கண்ணும் ஒளியும்	22
News	23	வர்த்தமானம்	23

Trichinopoly.

PRINTED AT THE *Ripon Press*, TEPPAKULAM.

Registered.] 1887. [*Price 2 Annas.*

ADVERTISEMENTS.

DRAVIDA RANJANI.

A monthly Tamil Magazine of Literature, Philosophy, Science &c.

Terms of Subscription in advance.

		TOWN.		MOFUSSIL.
Per	Annum	Rs 1-8—0	With Postage	Rs 1-14-0
,,	Half Year	,, 0-12-0	,,	,, 0-15-0
,,	Quarter	,, 0-6—0	,,	,, 0—7-6

Rate of Advertisement.— 6 Pice per line.

N. B. Subscription &c is payable in advance only and no subscription will be received for less than 3 months.

☞ *All communications regarding remittance, advertisement, news letters &c., should be addressed to*

T. V. VENKATRAYULU NAYUDU,

Proprietor Ripon Press,

Trichinopoly,

TEPPAKULAM.

☞The Magazine will continue to be sent to all intending subscribers who remit their subscription before the 22nd Inst.

DRAVIDA RANJANI.

திராவிட ரஞ்ஜனி.

புஸ். 1.] ஜனுவரிமீ 1887. [இல. 1.

எமது கருத்து.

வங்காளம், பம்பாய் முதலிய வட தேசங்களில் நமது சென்னை ராஜதானியைவிட, தேசபாஷைகள் கூடியமட்டும் நன்றாய் அபிவிர்த்தியடைந்து வருகின்றன. சுயபாஷைகளில் பிரசுரமாகிவருகின்ற வர்த்தமான பத்திரிகைகளும் அங்கு அதிகமாயிருப்பதுபோல இங்கில்லை என்பதற்கு ஐயமில்லை. இதனாலே இங்குள்ளவர்கள் சுயபாஷையைப் படிப்பதில் எவ்வளவேனும் பிரயாசப் படுகிறதில்லையென்றும் முயற்சி செய்கிறதில்லையென்றும் நினைக்கலாம். இங்கிலீஷ் படிப்பவர்களில் சிலர் தங்கள்சொந்தப் பாஷையை அலட்சியம் செய்கிறதுமுண்டு. இங்கிலீஷ் பாஷையை மட்டும் மேன்மேலும் விழுந்து விழுந்து படிக்கிறார்கள். இப்படி செய்வதினால் சிலர் தாங்கள் படிக்கிற இங்கிலீஷுக்குத் தங்கள் சொந்தப் பாஷையில் அர்த்தஞ் சொல்லத் தெரியாமல் மலைக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் தங்கள் கருத்துகளை வெளியிட வேண்டுமேயானால் ஊமைபோலப் பலவகையான ஜாடைகளைக்கொண்டு பிறருக்குத் தெரிவிக்கிறதைக்கண்ட பலர் பழிக்க இட முண்டாகிறது. நாட்டுப் புறங்களிலுள்ளவர்களும் தங்கள் பிள்ளைகளுக்கு இங்கிலீஷ் பாஷைமட்டும் தெரிந்தால் உத்தியோகம் செய்வார்களென்று முற்றும் தாய்ப்பாஷையை வெறுக்கிற

ள். இதெல்லாம் அறியாமையே. இதைக்கொண்டு நாம் இங்கிலீஷ் பாஷையைப் படிக்கவேண்டாமென்று சொல்லப்புகவில்லை. தமிழ்ப்பாஷையை அலட்சியம் செய்து விடுகிறார்களென்பதே. இ[illegible] ஐரோப்பாவில் மகாவித்வானாகிய (Max Muller.) மோக்ஷமூலர் என்னும் பண்டிதர் வங்காள தேசத்துப் பிரபு ஒருவருக் கெழுதிய கடிதத்தில் சொல்லுகிறார்:—

"நான் ஒரு காலத்திலும் இந்து தேசத்திற்கு வராதபோதிலும் என்னுயுள் நாளையெல்லாம் இந்துதேச இலக்கியங்களை ஆராய்வதில் கழித்து வருகிறேன். அந்நாட்டுக்குரிய உயர்தர நூல்களை ஆராய்ந்து கொண்டிருக்கையில் சிலவேளைகளில் நானும் அந்த நாட்டானானது போல் எனக்குத் தோன்றுகிறது. சுயஜாதி யபிமானம், பூர்வ இதிகாச விஷயங்களைக் குறித்து மேன்மை பாராட்டல், பூர்வ இலக்கிய விசாரணை செய்வதில் இடையறா நாட்டம், இவை இந்துக்களுக்குண்டாக வேண்டுமென்றெனக்கு வெகு ஆசையுண்டு. ஐரோப்பியரிடத்திலிருந்து விளையும் நன்மைகளை யநுசரித்துக்கொண்டு ஐரோப்பியராகி விடாமல் இருக்கும் நிலையிலிருந்துகொண்டு, மநுப்புத்திரரும் உசித பூமிக்குரியோரும், விசத்தைக்கண்டு பிடிக்க நாட்டமுடையவருமாயிருந்து, நீதி, அறம், அன்பு ஆகிய தருமநெறிகட் கிசையத் தொழில் புரிந்தால், எல்லோருமொருங்கே வணங்கத்தக்க அறிதற்கரிய கடவுள் ஆசீர்வாதம் பெற்று சுகத்தை அனுபவிப்பார்கள்." என்கிறார்.

ஆங்கிலேய நாட்டில் பிறந்த பண்டிதருள் ஒருவராகிய இந்த வித்துவானே, பூர்வதமிழ் இதிகாச விஷயங்களைக்குறித்து மேன்மை பாராட்டவும், பூர்வ இலக்கிய விசாரணை செய்வதில் இடையறா நாட்டம் பெறவும், இந்துக்கள் முயலவேண்டுமென்று இந்தப்படி தன் ஆசையை வெளிப்படுத்தி இருக்க, இந்துக்கள் தங்களுடைய சொந்தப் பாஷையை அலட்சியம் செய்துவருவது வயிற்றின் கொடுமையினாலேயே யல்லாமல் கற்ற அறிவினளவான சிறப்பினாலன்று.

தமிழ்ப் புலவர்கள் செய்யுளினிடத்து அடைந்திருந்த தேர்ச்சியும், விசேஷ சாமர்த்தியமுமே தமிழில் வாசகநூல்கள் பெருகாமல் குன்றிப் போனதற்குக் காரணமாம். சிலகலைஞரது கொடும்

வாசகத் தமிழை எவ்வளவாக ஊன்றி ஆராயினும், அவற்றின் பொருள் விளங்குவது மிகவும் கடினமாயிருக்கின்றது. சிலநூல்களுக்குச் சில வித்வான்கள் செய்திருக்கிற உரைகள் செய்யுளினும் மிக கருகலாயிருக்கின்றன. நாம் எழுதுகிற நூல்களில் நம்முடைய கருத்து பிறருக்கு நன்றாய் விளங்காவிடில் என்ன பிரயோஜனம்? மாந்தர் இன்னும் அறிவீனராயிருப்பதற்குக் காரணம் எவரும் அறிந்து கொள்ளா வண்ணம் அரும்பதங்களுடன் சந்திவிகாரங்க[illegible]னைத்தையும் பிரயோகித்து எழுதுவதே. பலருக்கும் பயன்[illegible]த்தக்க விஷயங்களை நாடி விருத்திசெய்வதே இக்காலத்தியல்[illegible]யிருக்கின்றமையால் சிலருக்குமாத்திரம் பயன்படுகிற கருகலான உரைவாசகங்களை விலக்கி எளிதான வாசக நடையில் வெளிப்படுத்தினால் அது பண்டிதர் பாமரர் அனைவோருக்கும் பயன்படுமென்பதற்கையமில்லை. ஆதலால் நாம் கருதிய பொருளை யாவரும் ஐயமின்றி எளிதில் அறியும்பொருட்டு இப்பத்திரிகையைத் தெளிவான நடையில் எழுதிப் பிரசுரஞ்செய்கின்றோம்.

இக்காலத்தில் எத்தனைபேர் தங்கள் தேச நன்மையையும் வெகு ஜனபிரயோஜனத்தையும் பற்றிய விஷயங்களில் தேசாபிமானம் பாராட்டாமல் சுயபிரயோஜனத்தையேகருதித் தங்கள் தேசம் எப்படிப்போனாலும் போகட்டுமென்று அதைப் பற்றிச் சற்றேனும் கவலைப்படாமலும், செல்வம் சகடக்கால்போல் கீழது மேலும் மேலது கீழுமாய்ப் புரண்டு வருந்தன்மை யாதென்றுணராமலே தாங்கள் மாத்திரம் மேன்மையடைய வேணுமென்கிற நோக்கமாய்த் திரவியந்தேடலிலும், உலகவின்பங்களை அநுபவித்தலிலுமாத்திரம் தங்கள் ஆயுள் நாட்களைக் கழிக்கின்றதைக் காண்கிறோம்.

இவ்வுலகிலுண்டாயிருக்கிற, பலவகையான தேர்ச்சிக்கும், செல்வத்திற்கும், செழிப்பிற்கும், “முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்” என்றபடி முயற்சியே முக்கிய காரணம். எந்தத்தேசம் சீரும் சிறப்பும், செல்வமும் பெற்று வாழக் காண்கிறோமோ அந்தத் தேசத்து வாழ்வு, அதன் அதிகாரிகள், குடிகள் என்றிவர்களுடைய நன்முயற்சியினால் ஆனதென்று நிச்சயமாய்ச் சொல்லலாமென்று யாம் இதில் முயன்றோம்.

ஆகவே நாம் நமது அபிப்பிராயத்தை லோகோபகாரமாக நன்றாய் வெளியிடுவதற்கு நமது சொந்தப் பாஷையைவிட வேறொன்றும் தெளிவாயிராதென்றும், நமது சொந்த பாஷையே நமது நாட்டில் எவர்க்கும் பயன்படுமென்றும் யூகித்து, பூமண்டலத்திலே ஒப்பும் உயர்வு மின்றி விளங்கும் இத் திரிசிராப்பள்ளியில் அவ்விதமான ஒரு தமிழ்ப் பத்திரிகை இல்லாமலிருக்கிற பெரிய குறையை நீக்கும்பொருட்டு இந்த "திராவிட ரஞ்ஜனி" என்னும் பத்திரிகையைப் பிரசுரஞ்செய்து, அதை அநேக தேசங்கள்தோறும் நவமாய் பவனிவரும்படி செய்ய அதிர்ஷ்டம் பெற்றோம்.

இந்த பத்திரிகையில் நமது இந்துதேச ஜனங்களுக்கு நாகரீக அபிவிர்த்தியும், பொது நன்மையை நாடும் குணமும், ஐக்கியமும், தேசாபிமானமும் மிக உண்டாகும்படிக்கு நீதிசாஸ்திரங்களும், இல்வாழ்க்கையில் குறைவுவராமல் பாதுகாக்கும் முறைகளும், பூர்வசரித்திரம், ஞானநூல், சுகாதாரம் முதலான சாஸ்திரங்களும், அரசியலைச் சார்ந்த விஷயங்களும், விநோதமான கதைகளும், அபூர்வமான செய்திகளும், புதின சம்பவங்களும், வாணிபம், வேளாண்மை கைத்தொழில் சுதேச பிரதேச வர்த்தமானங்கள், பொது நன்மைக்குரிய விஷயங்கள் யாவும் பிரசுரஞ் செய்யப்படும். இப்பத்திரிகையானது நமது தேசத்தாரின் நன்மைக்கென்ற முழுநோக்கத்துடனே பிரசுரஞ்செய்யப்படுகின்றது.

ஆதலால் நாம் இது விஷயமாய் எடுத்துகொண்ட பரிசிரமத்தை யாவரும் வியந்து, நமது தமிழ்நாட்டிலுள்ள 1,50,000,000 ஜனங்களுள் பரோபகார சிந்தையுடைய கனவான்கள் தனவான்கள் யாவரும் இதற்குக் கையொப்பக் காரர்களாகி நமக்குத் துணை நிற்பார்களேயாயின் அந்நன்றியைப் போலச் சிறந்தது வேறென்னுண்டு? கனவான்களால் இப்பத்திரிகைக்குக் கையொப்பம் அதிகமாய்ச் சேரச் சேர அநுபந்தங்களும், படங்களும், சேர்த்தனுப்பப்படும்.

மேலும் கையொப்பஞ்செய்யுங் கனவான்கள் இப்பத்திரிகையைத் தங்கள் பந்துமித்திரர்களுக்கும் கொடுத்துப் படிக்கச் செய்து அவர்களையும் இதற்குக் கையொப்பக் காரராகச்சேரும்படி செய்யக் கோருகின்றோம்.

கம்பர் சரித்திரம்.

"எல்லாம் அறிந்தவர்களும் ஏதும் அறியாதவர்களும் இல்லை"
றென்னப்படும் இவ்வுலகத்தில் காலாகாலங்களில் தேசங்கள்
றும் பாஷைகள் தோறும் பேரறிவில் முதிர்ந்த பரமஞானிகள்
லாம் அறிந்தவர்களாகத்தோன்றி ஏதுமறியாதவர்களுக்கு அறி
கட்டி, தங்கள் உள்ளத்தில் உதித்த ஞானக்கினி ஜுவாலையினுல்
கத்துக்கு மெய்யறிவுச்சுடர் கொளுத்திவருகிறார்கள், மானிட
பாண்டத்திலே முத்திரிக்கப்பட்ட தெய்வ சொரூபத்தின் தே
பாவ இருளினல் எவ்வளவுதூரம் கறைபிடித்து களங்கப்பட்
தாலும், அது முற்றிலும் மங்கி அருள்மாறிப்போகாமல், கலிக
துக் காரிருளிலுங் கூட கங்குலில் பூத்த விண்மீன்கள் போல
அர்த்தசந்திரன்போலவும், பூரணசந்திரன்போலவும் பிரகாசி
கொண்டே இருக்கிறது. இந்த ஜோதியின் பிரதிவிம்பத்தால்
வொரு மனுஷனும் நன்மை தீமை யின்னதென்று பகுத்தறி அ
வறிவால் தன்னையும் தன்னைச் சேர்ந்த மற்றவர்களையும் பிர
பிக்கும் காரணம் பற்றி, "ஏதும் அறியாதவர்களில்லை" என்ற
ற்கையறிவை நோக்கிக் கூறப்பட்டது என்று விளங்கும். இவ்
கை அறிவு எல்லா மானிடருக்கும் பொதுவாயிருந்தாலும், அந்த
காரத்தில் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரும்பொருட்
டு உன்னதத்திலிருந்து தோன்றிய அருளுதயத்தால் பிரதிஷ்டை
யாகி பரமபலி பீடத்து அக்கினித்தழலால் பரிசுத்தமான நாவிலே
மந்திராட்சரம் வரையப்பெற்ற தெய்வீகபுருஷர், தங்கள் உள்ளத்தி
ல் பொங்கியெழுந்த நல்லவிசேஷத்தை உலகத்துக்கு உபதேசிக்கிற
உத்தம குருக்களாக சமயாசமயங்களில் தோன்றுகிறார்கள்.

கோரான் வேதத்திலுள்ள மூலமந்திரத்துக்கு உபவாக்கியம்
ஒன்றுண்டு. அது "கடவுள் ஒவ்வொரு ஜாதியாருக்கும் தங்கள்
தங்கள் பாஷையில் ஒரு தீர்க்கதரிசியை அனுப்புகிறார்" என்பதாம்.
இதுமெய்தான். ஞானமானது தன் பிள்ளைகளுக்கு கிரேக்க
பாஷையிலும் லத்தீன்பாஷையிலும் மாத்திரமல்ல, தென்மொ
லும் தெலுங்குமொழியிலும், ஆரியத்திலும் திராவிடத்திலு
வபாஷை என்று புலவர்போற்றும் சமஸ்கிருதத்திலும், நீச

என்று மூடர் இகழும் இங்கிலீஷிலும் போதனை செய்வது அதன் சுபாவ நெறி. அப்படியே ஞானமானது தன்மக்கள் தன்பொக்கிஷ சாலையில் புகுந்து தன்திரவியக்குவியல்களைத் திறந்தெடுத்து அநுபவிக்கும்படி கல்விக்களஞ்சியத் திறவுகோலை ஒரே ஹோமர் கையிலும் ஒரே ஷேக்ஸ்பீயர் கையிலும் மாத்திரமல்ல, பற்பல தே களில் பற்பலஹோமர்கள் கையிலும் பற்பல ஷேக்ஸ்பீயர்கள் யிலும் கொடுத்துவருகிறது. இந்தக்கோரான் உபதேசப்படி தமி ாஷைக்கும் தேவனால் அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசி அதா ஒரு ஞானசிரேஷ்டன் இருந்தார். அவர்பேர் கம்பர். அவரும் க்கு முன்னும்பின்னும் இருந்த தீர்க்கதரிசிகளைப் போலவே உல துக்குவந்தார். உலகம் அவரை அறியவில்லை. உலகம் அவருக் ப் பாத்திரமாயிருக்கவில்லை. அவர் அப்பத்தைக்கேட்க கல்கொடுக் பட்டது. அவர் பசியின் கொடுமையால் கஞ்சிக்கு இரந்துதிரி யில் கரைந்துவிழும் வேலிமண்ணும் இடிந்துவிழும் சுவர்ச்செங் யும் காட்டப்பட்டது. தாசி பொன்னி அவரை அடிமையாக் ம், அம்பட்டக்கிருது அவரை அண்ணன்முறை கொண்டாடவும், றினும் கொடியவன்களுளன் என்று கோவேந்தன் அவரைக் றைதூற்றிக் கோபித்து, கோவண ஆண்டியாய் தூரத்தவும் அவருக்கு விதித்திருந்தது. ஆகையால் இந்த மகாபுருஷனுடைய ஜீவிதையைச் சுருக்கமாய்ச் சொல்லி அவரையும், அவருடைய காவியத்தையும் பற்றிச் சில அபிப்பிராயங்களை வெளியிட எத்தனித்திருக்கிறோம்.

சாலிவாகன சகாப்தம் 807-ம் ஆண்டுக்குசரியாய் நிகழ்ந்து நின்ற இரட்சணிய சகாப்தம் 884-ம் ஆண்டில், சோழபூமியில் செங்கோல் செலுத்தின "ராஜ ராஜ குலோத்துங்கதேவர்" அரசாட்சியில் கம்பர் ராமாயணம் பாடினதாகத் தெரியவருவதால், சுமார் ஆயிரத்துச்சில்வான வருஷங்களுக்குமுன் கம்பர் இருந்ததாக ஒப்புக்கொள்ளலாம். கம்பருடைய ஜாதி வர்ணத்தின் வகைதொகைகளும் குலம் கோத்திரமும் இன்னதென்று திர்மானமாய்ச் சொல்லவில்லை யென்றாலும், ராட்லர் பாதிரியார் செய்வித்த அகராதியிலும், யாழ்ப்பாணத்தில் "தமிழ்ப் புலவர் ஜீவிதை" (Tamil Plutarch) என்று அச்சிட்ட நூலிலும் கண்டிருக்கிற பிரகாரமும், பண்டுதொட்டு பரவணியாகச் சொல்லக்கேட்டு வந்திரு

த்திற பல தமிழ் பண்டிதருடைய வாக்குமூலப்படிக்கும், கப்
தென்கலை அரசகுலமாகிய திராவிட க்ஷத்திரியர் வம்சத்தில் பி
றவர் என்று சொல்லலாம். சிலர் கம்பர் ஓர் ஓச்சன் வீட்டில் பி
றபடியால் ஜாதியிலே அவர் ஓச்சன் என்கிறார்கள். சிலர் கம்
ஓர் முதலியார் வீட்டில் வளர்ந்தபடியால் ஜாதியிலே அவர் மு
யார் என்கிறார்கள். சிலர் கம்பர் தாமெழுதிய ஏரெழுபது என்
நூலில் ஏரின் மகத்துவத்தைச் சிறப்பித்து ஏர் உழும் வேள
குலத்தையும் சிலாகித்துப் பேசுவதால் அவரும் வேளாளர்
த்தையே சேர்ந்தவராகவேண்டும் என்கிறார்கள். இந்த நிய
நிற்காது. 1-வது, ஏரின் மகிமை எடுத்துரைக்கிறவனெல்லா
பிடித்த ஜாதியான் என்பது நியாயமேயல்ல. அதிவீரராமப
டியன் உழுதான் சுவையின் சிறப்பை விவரித்திருந்தாலும்,
அண்ட ஜாதியல்லவே. 2-வது. கம்பர் தாமே வில்லையும் வில்
லையும் சிறப்பித்து சிலையெழுபது பாடியிருக்கிறாரே. ஆகை
அவர் ஏரெழுபது பாடினபோது சூத்திர வேளாளனும் இ
சிலையெழுபது பாடினபோது கூடுவிட்டுக் கூடுபாய்ந்து க்ஷத்
திரன் ஆனாரோ? 3-வது. கம்பர் ஏரெழுபது பாடினதற்குக் கா
அவருடைய சரித்திரத்திலே விளங்குகிறது.

செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழி போகோமே—முட்டிபுகும்
பாப்பாரகத்தை யெட்டிப் பாரோமே யெந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்.

என்றிப்படி வேளாளரைப் புகழ்ந்தவர், அப்படிப் புகழ்
குக் காரணம், தாம் உள்ளூரை விட்டு அயலூருக்குப்போய் உ
பசியோடு மறுகின வேளையில் உழவன் செய்த உபகாரத்தை ?
எவும் என்னை உண்ட கூழுக்குப் பதில் அடைத்ததேயன்றி
பிறந்த குலமென்றுமல்ல, புகுந்த குலமென்றுமல்ல என்று எ
உணரலாம். 4-வது. ஒட்டக்கூத்தர் குலத்தோராகிய கைக்
தங்கள் பாவையும் படைமாத்தையும் வர்ணித்து ஓர் கி
பாடவேண்டுமென்று அவரைக் கேட்டபோது அவர் "வேளா
வர்ணித்துக் கம்பர் பாடியதற் கெதிராய் நம்மை நாமே த
ததுகொண்டால் யார் ஒப்புவார்கள்? இன்னொரு குலத்தான

நமைப் புகழ்தல் வேண்டும்" என்று கொடுத்தவிடையை ஆராய்ந்தால் வேளாளரைப் புகழ்ந்த புலவன் வேளாளன் அல்ல என்று விளங்கும். 5வது: க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவர்களில் மகுடாதிபதியாய் செங்கோல் பிடித்து சிம்மாசனத்தில் அரசு வீற்றிருந்த ட்டவர்த்தனனுக்குத் தேவன் என்ற பட்டமும், குறுநில மன்ன க்கு இராயன் என்றபட்டமும், மற்றக் கிராமாதிபதிகளுக்கும் லச்சுவான்களுக்கும் நாடான் என்ற பட்டமும் பேரோடு கூட் பேசுவது பூர்வ வழக்கம் என்று திருவானைக்கா கோவிற் சுவ ரிலும், மற்றும் நமது பார்வையில் தென்பட்ட சில சிலாசாதன ளிலும், செப்புப்பட்டயங்களிலும் வரையப்பட்டிருக்கும் வா தைகளினால் பிரத்தியட்சமாவதாலும் கம்ப நாடான் திராவிட க்ஷத்திரியர் குலத்திலேயே உதித்தவர் என்று தீர்க்கலாம். வது. மநுநீதியின் முறைவழுவாது பிரம க்ஷத்திரிய வைசிய சூத் ர் தம் தம் குலாசாரங்களை அநுசரித்து, தம் தம் சுயஜாதிக்குள் பந்தங் கலக்க வேண்டுமென்று சாதாரண ஜனங்கள் முதலாய் வ ஜாக்கிரதையோடிருந்த அந்தக் காலத்தில், கம்பருடைய ன் அம்பிகாபதிக்கு சோழதேவன் தன் மகளை விவாகஞ்செய்து டுக்கச் சம்மதித்ததினாலும், 7-வது. அம்பிகாபதி தனக்கு மிஞ் சம்பந்தமாக அரசனுடைய அநுமதியன்னியில் அரச கன்னி யை காந்தர்வ விவாகம் நடப்பிக்க முயன்ற குற்றத்துக்கு நிவா மாக பேரின்பத்தின் பேரில் ஆயிரம் பாட்டுப் பரிசங்கட்ட த்ததே யல்லாமல் கொள்ளக் கொடுக்கக்கூடாத நான்காவது ாதியான் என்று ஒரு குறையும் அவன் பேரில் சுமத்தவில்லை யாகையாலும், 8-வது. குலோத்துங்கதேவன் கம்ப நாடனை மாமன் என் று முறை சொல்லி அழைக்கிறபடியினாலும், 9-வது. கம்பருக்கும் நாசிபொன்னிக்கும் நடந்த சம்பாஷணையில் கம்பர் "அம்மா, நீ ராஜனுக்கு மனைவியாகையால் எனக்கு முறைக்கு மகளாகவே ண்டும்" என்று சொல்லி இவ்விதமாய் தமக்கும் குலோத்துங்கனுக்குமுள்ள இரத்தபாந்தத்தைப் பாராட்டி ஸ்திரமாய் ஸ்தாபித்திருப்பதாலும், 10-வது. கம்பருடைய பேரனும், அம்பிகாபதியின் புத்திரனுமாகிய சேந்தன் அரசகுலத்தில் அவதரித்தவன் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிற படியினாலும், 11-வது. கம்பர் ரமனை "கங்கைத் திருநாடுடையான்" என்று கூறின முறையாய்

புராதனப் புலவரில் ஒருவர், கம்பரைக் "கம்பநாடுடைய வள்ளல்"
என்று தெளிவாகக் கூறியிருப்பதாலும் ஆட்சேபனை யில்லாமல்
கம்ப நாடார் திராவிட க்ஷத்திரிய குலத்திலேயே பிறந்தவர் என்
திடமாய்ச் சொல்லி சாதிக்கலாம்.

எப்படியாகிலும் சரி; ஹோமர் இருந்தபோது எழு பட்ட
ங்களின் தெருத்தோறும்

வஞ்சகர்பால் நடந்தலைந்து காலில் புண்ணும்
வாசல்தோறும் முட்டுண்டு தலையில் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகி நெஞ்சில் புண்ணும்

ஆறுப்புண்ணாய், புண்ணழுகி, புழுமலிந்து, கண்ணவிந்
கருவி கரணாதிகளுமோய்ந்து, நோயும் பாயுமாய்க் கிடந்து இ
துபோன பின், அந்த எழு பட்டணத்தாரும், ஹோமர் எ
கள் ஊரான் உங்கள் ஊரான் என்று சச்சரவுபட்டுச் சண்டை
க்குக் கொடிக் கட்டின பிரகாரம், கம்பனையும் எஞ்சாதி உஞ்சா
என்று எங்குந் தொடர்ந்து எதிர் வழக்கிடுகிறவர்கள் ப
இருக்கிறார்கள். பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கு ஒடுக்கத்தி
அப்பத்தையும் ஒடுக்கத்தின் தண்ணீரையும் கூடக் கொடுக்கா
பட்டினி போட்டுப் பஞ்சம் பறத்துவதும், புத்திரர் அந்த தீர்
தரிசிகளுக்கு சமாதி எடுப்பித்து, பூத்த கல்லறைகளையும் பு
கித், தங்கள் புத்திரபௌத்திரருடைய மந்தப் புத்திக்கு மருந்
அந்த சமாதித் தூளைக்கரைத்துக் குடிக்கக் கொடுக்கிறதும் உ
த்துக்கு நூதனகாரிய மல்லவே.

கம்பர் பாக்கியவதியாகிய தமது தாயாரின் கர்ப்பத்தில் த
ங்கி வெளிப்படு முன்னதாகவே, சோழதேசத்தில் குறுநிலமன்
னாக கம்ப நாட்டை ஆண்டுவந்த அவருடைய பிதா ஏதோ கல
கேரிட்டதில் உயிரிழந்து மாய, உள்ளது உரியதை யெல்ல
பகைவன் பறிமுதற்கொண்டதால், பூரண கர்ப்பிணியாயிருந்த அ
ருடைய தாயார் தன்னைக் கொண்டோடிப்போய், திருவழுந்தூ
ஓர் ஓச்சன் கூரை நிழலில் ஒதுங்கிக் காலந்தள்ளி வருகை
கம்பர் பிறந்தார். பிறந்து சில காலம் சென்ற பின் அவருடை
பிதாவுக்கு இஷ்டனாகிய திருவெண்ணெய் நல்லூர் சடைய
முதலியார் தாயையும் சேயையும் தமது கிரகத்தில் ஏற்றுக்

ண்டு அன்ன வஸ்திராதிகள் அளித்துப் பராமரிக்க அந்த ஆதர வில் கம்பருடைய பாலிய காலம் முழுவதும் இருந்தார்கள். கம்பர் கல்விபயிலும் பிராயம் அடைந்தவுடனே மேற்படி முதலி யார் தம்முடைய பிள்ளைகளோடு அவரையும் பள்ளிக்கு வைத்துக் கல்வி பயின்று வர ஒழுங்கு செய்ததாகத் தெரியவருகிறது. அந்தப் பள்ளிக்கூடத்து உபாத்தியாருக்கு வயிரபுரமென்னும் கிராமத்தில் ரு புன்செய் நிலமிருந்ததாம். அதிலே கம்பும் தினையும் கதிர் ளி பாலடைத்து மணிமுற்றிருந்ததால், அந்த விளையைக் காக் கும்படி அவர் முறைமுறையாய் பிள்ளைகளை அனுப்பிவருகையில் ஒரு நாள் கம்பச் சிறுவனும், தன் முறையிலே போய் காவல் நின்றானும். அச்சமயத்தில் அப்புராதிபதியாகிய காளியங்க ராயன் குதிரை அங்கே மேயவரவும், சிறுவன் அதை அதட்டி ஓட்டியும் அது போகாமல், அஞ்சாது நின்று பயிரை மேய்ந்து அழித்தபடி யால், காவல் நின்ற பையன் கையை நெறித்துக் கொண்டு ஐயோ உபாத்தியார் அடிப்பாரே, என்ன செய்வேன் என்று ஏங்கி ஏங்கி அழுதுகொண்டு அருகிலிருந்த காளி கோவிலண்டை போனானும். உடனே காளி பிரசன்னமாகி, "கால்தரை தோய நின்று கண் ணுக்கும் எளியளாகி" நாக்கை நீட்டைச் சொல்லி, அதிலே பீஜாட் சரத்தைப் பதித்துப் பயப்படாதே என்று தேறுதல் படுத்தி அனு ப்பினளாம். சிறுவன் திரும்பவந்து பார்க்கையில் குதிரை பின்னும் மேய்ந்து கொண்டிருந்ததைக் கண்டு, குதிரையைத் துரத்திப் பயி ரைப்பாதுகாக்கவேறுவழிகாணுமல், வாய்விட்டு வையும்வகையாய்

வாய்த்த வயிரபுர மாகாளியம்மே நீகேள்
காய்த்த தினைப்புலத்திற் காலைவைத்துச்—சாய்த்து
குதிரை மாளத்தின்ற காளிங்கராயன்
குதிரை மாளக் கொண்டு போ.

என்று கவிபாடிச் சபித்தானும். "சரந்தரும் சாபமல்லாமல் தடுப்பரும் சாபம்வல்ல," அவ்வாக்கு வலியால் குதிரை உடனே துடிக்கத்துடிக்கச் செத்து விழுந்ததாம். இதை உபாத்தியாயர் அறிந்து பறக்கப்பறக்க ஓடிவந்து, ஐயோ ஊராள்வான் குதிரையா ச்சே, என்ன அனர்த்தம் வந்துவிளையுமோ வென்று சித்தங்கலங்கி திகைத்து நின்றுனாம்.

(இன்னும் வரும்.)

பிரபோத சந்திரோதயம்

பிர்மமானது எங்குந்தானாய் எல்லையில்லாமல் நித்தியப்பிரகாசமாய் விளங்க, மாயையானது எங்குமில்லாமல் அநித்தியமாய் அந்தகார (அஞ்ஞான) வடிவாய் இல்லாததே உண்டென்று விளங்குகின்ற தன்மையைப்பற்றிப் பேசுவோம்.

யாதொரு விகாரமு மில்லாமலிருக்கின்ற சுத்தப்பிர[illegible] சுயமாய் விளங்க அதையறியாதுவிசாரித்தறியாக் குறைவால் சூ[illegible] கிரணங்கள் தாக்கி மேலெழும் ஆவியைத் தண்ணீரென்று கொள்ளப்படுவதுபோல ஆகாயம் முதல்பூமியீறாக ஒன்றிலிருந்தொன்றுண்டாய் மூன்றுலகங்களாகத் தோற்றப்படுகின்றது. இப்படி மெய்யெனத்தோற்றும் உலகத்தை விசாரணைசெய்து பார்த்தால் சூரிய கிரணத்தைத்தவிர நீர் எவ்வளவும் இல்லாததுபோலச் சுத்தபிர்மமாய் விளங்குகின்ற ஆன்மபோதத்தைத்தவிரத் தோற்று மிவ்வுலகமானது முக்காலத்திலும் முற்றும் இல்லையே யாம்.

இப்படிப்பட்ட ஆன்மசொரூபமே இரண்டல்லாததாயும், வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாததாயும், சலியாததாயும், மூலமாயும், தத்துவமாயும், அடையத்தக்கதாயும், சர்வசமமாயும், சத்து சித்து ஆநந்தமாயும், சாந்தமாயும், சுயம்பிரகாசமாயும், ஓர்விகாரமும் பொருந்தாததாயும், பிர்மமாயும் விளங்கிக்கொண்டிருக்க, காந்தக்கல்லானது அசையாது தன்னிலையில் நிற்க அதற்கெதிரிலுள்ள ஊசி தானாய் அசைவதுபோலச் சுயம்பிரகாசப் பிர்மத்தின் சந்நிதிமாத்திரத்தினாலேயே "மாயை"யானவள் விகாரத்தையடைந்து கருப்பமுண்டாய் "மானதன்" என்றொரு பிள்ளையைப் பெற்றாள்.

மாயைத்தாய் இப்பிள்ளையை மார்பிலணைத்து வளர்த்து வருகையில் அஞ்ஞானத்தை ஞானமாகவும், ஞானத்தை அஞ்ஞானமாகவும், அமுதை விடமாகவும், விடத்தை அமுதமாகவும் கொள்ளும்படி பழக்கிக் கொண்டேவந்தாள்.

ஆகையினால் இப்பாலன் உவமை சொல்லிலும் பொருந்தாத தன் தகப்பனாகிய பிர்மவிருட்சத்தினிடம் புல்லுருவி முளைத்தது போல வளர்ந்து கொண்டிருந்தான். தன்தாய் சந்தோஷமடையும்படியாய் மானதன் "பிரவிருத்தி" "நிவிருத்தி" என்கின்ற இரண்டு

கன்னிகைகளை விவாகஞ்செய்து கொண்டான்.

இவ்விரண்டு நாயகிகளில் மூத்தாளிடமாய்,

1	மோகன்.	6	கோபன்.
2	அகங்காரன்.	7	மச்சரன்.
3	மன்மதன்.	8	சங்கற்பன்.
4	மானன்.	9	இராசதன்.
5	காமன்.	10	சந்தேகன்.
		11	தாமதன்.

இப்பதினோராண் பிள்ளைகளையும்

1	தீவினை.	3	அகீர்த்தி.
2	கபடி.	4	அநீதி.

இந்நான்கு பெண்பிள்ளைகளையும் ஆகப்பதினைந்து பிரஜைகளை படைத்தான்

இளையாள்சங்கதி இனிமேற்றெரியும்.

மிருச்சகடிகம்.

[இருக்வேதம், ஸாமவேதம், கணிதசாஸ்திரம்மற்றும்பல கலைகளினும் வல்லவனும், நூறுவருடம் பத்து நாள் இம்மண் மிசைவசித்து, தன்தநயனுக்குத் தன் அரசை முடி சூட்டித்தேகவியோகமுற்றவனுமான சூத்திரகன் எனும் அரசனால் இயற்றப்பட்ட இந்த நாடகமானது, இல்லறம், நீதி, துஷ்டர்களின் சுபாவம், அதிகாரிகளின் துர்வியவஹாரங்கள், விதியின் கொடுமை ஆகிய இவைகளைப்பற்றி விவரமாய்ப்பேசுவதினால் நம் நண்பர் பலர்க்கும் நன்கு பயன் படுமெனக் கருதி வடமொழியினின்று தமிழில் மொழி பெயர்த்து பிரசுரம் செய்யப்படுகிறது.]

அவந்தி அல்லது உஜ்ஜயினி என்னும் நகரத்தில் பிராமண குலதிலகனான சாருதத்தன் எனும் ஓர் வர்த்தக கனவான் இருந்தான். இவன் எழிலில் காமனையும் பொறுமையில் பூமியையும் கொடையில் கர்ணனையும் செல்வத்தில் குபேரனையும் நிகர்த்து இப்புவனமனைத்திற்கும் ஓர் அணிகலமாக இருந்தான். ஆனது பற்றி அந்நகர

வாசிகள் அனைவரும் அவனிடத்து அதிக அன்புபாராட்டி அவனைத் தம்தந்தைபோல் பாவித்து ஆதரித்துவந்தார்கள். இம்மகானுபாவன் தனக்கு மிகுந்தசெல்வம் கிடைத்தும் அதை சற்றேனும் இலக்ஷியம்பண்ணாமல் கோவில் குளம் சத்திரம்சாவடி முதலிய திருப்பணிகளைச்செய்தும் தன்அகத்திற்கு எத்தனைபேர் அதிதிகள் வந்தபோதிலும் அவர்கட்கு இல்லையென்று சொல்லாமல் அறுசுவை அமுதுஅளித்தும் மற்றும்பற்பல தானதர்மங்களைப் புரிந்தும் தன்செல்வத்தையெல்லாம் தர்மவிஷயத்திலும் நேசர்விஷயத்திலும் வாரியிறைத்து வறுமையுற்று வருந்தும்தசையை அடைந்தான். அதேநகரத்தில் காசைப்பறிக்கும் வேசியர் குலத்தில் உதித்த வஸந்தசேனை எனும் ஓர் விலைமாது இருந்தனள். இம்மடந்தை, தன்மரபின் முறைமைக்கு முற்றிலும் விரோதமாய்த் தனக்குப்பொருள் உதவும் புருடருடன் புல்லும்சுகம்பேணாமல் நற்குலநாரியைப்போல் சொற்பதனம்உடையாளெனினும் அற்புதகுணங்களும் 'விற்பன விவேகமுமுடைய ஓர்நற் புருடனைநாட மனமுடையளாக விருந்தனள். இங்ஙனமிருக்கையில் வஸந்தோத்ஸவம் அல்லது காமன் பண்டிகை என்னும் திருவிழா சம்பவித்தது. இம்மஹோத்ஸவத்தில் எப்பொழுதும் வழக்கப்போல் அந்நகரவாசிகளில் ஸ்திரீபுருஷர் எல்லோரும் காமதேவாலயத்தின் உத்யான வனத்தில் சென்று ஆடல்பாடல் மற்றுமுள்ள விநோதவிளையாட்டுகளைப் புரிந்து ஒருவர்மேல் ஒருவர் மஞ்சணீர் கந்தப்பொடி முதலியவற்றைவாரி இறைத்துக்கொண்டு வெகுஉல்லாசமாயிருக்குந்தருணத்தில் அங்குஉற்றிருந்த சாருதத்தனும் வஸந்தசேனையும் ஒருவரோடொருவர் சந்திக்கும்படி நேரிட்டது. அக்காலை அச்சாருதத்தனது தயாதாக்ஷிண்யாதி குணங்களைப்பற்றிச் செவியுற்றிருந்த அவ்விலைமகளும் இப்பொழுதுநேரில் கண்ணுற்றவுடன் அவனது அழகிற்கும் குணங்களுக்கும் ஈடுபட்டு அவனை அதிக வாஞ்சையுடன் நோக்கினாள். அதைஅறிந்த சாருதத்தனும் அவளுடைய ரூபலாவண்யத்தையும் யௌவனப் பருவத்தையும் நோக்கி அவளிடத்தில்மிக்க ஆவல் உற்றவனாயிருந்தபோதிலும் தனதுவறுமையை நினைந்து, "இவளோதாஸிப்பெண்; நாமோ நித்ய

மிருத் = மண்; சகடம் = வண்டி. ஆகவே மிருச்சகடிகம் என்பதற்கு மட்சகடத்தைப்பற்றிச் சொல்லும் நூல் எனக்கருத்து.

தரித்திரன். அங்ஙன மிருக்கையில் முடவன் கொம்புத் தேனுக்கு அவாவுற்றதுபோல் வீண்ஆசைப்படுவதில் பயன்என்?" என்று தன்னுள் உன்னி மனங்குன்றியிருந்ததை அவனது முகக் குறிப்பினால் உணர்ந்த வஸந்தஸேனையும் அருகுற்று, "ஐயனே! யான் குணத்தையன்றிப் பணத்தைப் பெரிதெனப்பாவிப்பவள் அல்ல. தாங்கள் இதன்பொருட்டுச் சஞ்சலப்படவேண்டாம்" எனச்சொல்ல சாருதத்தனும் உளமகிழ்ந்து, "அங்ஙனமாகில் நினைச்சரணம் அடைந்தேனே; உன்னிடத்தில் இவ்வாத்மாவை அர்ப்பிதம் செய்துவிட்டேன்," என்று இங்ஙனம்தன்மேல் மிக்கமோஹத்துடன் மொழிந்ததைக்கேட்டு வஸந்தஸேனையும் முகத்தில்புன்சிரிப்புடன் அவனைத் தன்னிருபுஜங்களாலும் தழுவி வெகுசரஸமாய்ச் சம்பாஷித்துக் கொண்டிருந்து பின்னர் எல்லோருந் தந்தம் இல்லத்திற்கு ஏகவே தானும்தன் சேடிகளுடன் அவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தனதுவீட்டிற்கு ஏகினாள். சாருதத்தனும் தன்தோழன் மைத்ரேயனுடன் தன்னிருப்பிடத்திற்குச் சென்றான். இங்ஙனம் இவர்கள் ஸரஸ ஸம்பாஷணை புரிந்து கொண்டிருந்ததைக் கண்ணுற்ற சகாரன் என்போன் மிக்க பொறாமையுற்று, "அடா! நாம் இவ்வூர் அரசனது மைத்துனன், அதிக செல்வாக்குடையவன்; இதை உணர்ந்தும் இத்தாசி நம்மை லக்ஷ்யம் செய்யாது வறுமைக்கு அடிமைப்பட்டிருக்கிற இச்சாருதத்தனை நேசித்தாள்! நல்லது, ஏற்றசமயம் வாய்க்கும்போது பேசிக்கொள்வோம்," என்று எண்ணிக்கொண்டே இல்லத்திற்கு ஏகினான்.

பின்பு ஓர்நாள் சூரியாஸ்தமனமான பிற்பாடு வசந்தசேனையும் தன்பிராண வல்லபனாகிய சாருதத்தனிடத்திற்குப் போகக்கருதித் தான் ஏகாகினியாய்ப்புறப்பட்டு இராஜவீதிவழியாய் வருகையில் அங்கே இவளை மனதில்கருதி வருகின்ற சகாரன் தன்தோழன் விடனுடனும் தன்சேவகனுடனும் இவளைக்கண்ணுற்று, "ஆகா! கும்பிடப் போனதெய்வம் குறுக்கேவந்தது" எனத்தன்னுள்ளங்களித்து மற்ற இருவருடனுங் கூட வசந்தசேனையை துரத்திக்கொண்டு வந்தான். இங்ஙனம் இம்மூவருமிவளைத் துரத்திக்கொண்டுவருகையில் வசந்தசேனையும் மிகவும்பயந்து நடுநடுங்கி அவ்வேளை எங்கும் இருள்மூடி இருந்தமையால் அவர்கள் கையில் அகப்படாமல் மீண்டும் ஓடத்தலைப்பட்டாள். அத்தருணத்தில் சகார

னும் அவளை நோக்கி, "அடி வேசி இக்கணம் நீ என்னைக்கூட இசையாவிடில் யான் உன்னை (பூர்வத்தில் வாலியின் பெண்சாதியாகிய சிதையின் தலைமயிரைப்பற்றி துர்யோதனன் ஈர்த்துக் கொண்டு போனதுபோல்) தலைமயிரைப்பற்றி யீர்த்துக்கொண்டு போகிறேனை பார்! என்று சொல்லிவிட்டு விடனை நோக்கி, "பாவ இவள் காமதேவாலயத்தின் உத்யானத்தில் நடந்த வஸந்தத்திருவிழா முதற்கொண்டு அந்த தரித்திர சாருதத்தன்மேல் அதிக அன்புபாராட்டி நம்மைத்திரணமாக மதித்திருக்கிறாள். இதோ இடதுபுறத்தில் அவன்வீடு இருக்கின்றது. ஆதலின் இவளை அங்குசெல்ல விடாது வெகு ஜாக்கிரதையாய்ப் பிடித்துக்கொள்வோம் வாருங்கள் எனவே விடனும் தன்னுள், ஆகா! இவ்வணங்கின் அழகுக்கு ஐயன் சாருதத்தனிட பௌவனப்பருவமே பிரயோஜனம்; ஆகையால் இவள் அவரிடம் சுகமாகச்செல்லட்டும் இம்மூர்க்கனை அடைவதில பயன் என்ன? என்று எண்ணிக்கொண்டு அவளைப்பிடிக்க முயலாமல் சகாரனை நோக்கி, "ஆம் இதோ இடதுபுறத்தில் அவன்வீடு இருக்கிறது; இவளை விடாதே" என்று சொல்லவே வசந்தசேனையும், "ஆகா! நமக்கு இவர்கள் சத்துருக்களாக விருந்தும் நம் ஆசை நாயகனது வீட்டைக்காணாதுதேடித் திரிகிறநமக்கு அவரில்லத்தைக்காட்டி உபகரித்தனர்." என்றுமிக்க சந்தோஷத்துடன் அவ்வழியாகச் செல்லுகையில் விடனும் அவளுக்கு நன்மைசெய்யவேண்டியே அவளை நோக்கி, "ஓ வசந்தசேனையே! இப்பொழுது எங்கும் காடாந்தகாரமாக இருப்பதால் எங்கள்கையில் அகப்படாமல் தப்பி ஓடி ஒளித்துக்கொள்ள முயன்றாலும் நினதுபாதங்களில் அணிந்திருக்கின்ற சிலம்பு தண்டை கொலுசுமுதலிய ஆபரணங்களின் ஒலியும் நின்கூந்தலில் தரித்தநறுமலர்ச் சரங்களின் வாசனை நின்னை நன்கு தெரிவிக்கின்றன." என்றதைக்கேட்ட வசந்தசேனையும் உடனே தனதுகாலில் இட்டிருக்கின்ற கலன்களைக்கழற்றி சிரசில் அணிந்த புஷ்பமாலையையும் எடுத்தெறிந்துவிட்டு அவர்கள்கையில் அகப்படாமல் ஒரே ஓட்டமாக ஓடிச் சாருதத்தனது மாளிகையைக்கிட்டிச் சுவற்றைக்கரங்களால் தடவிப்பார்த்தவளவில் அதுவீட்டின் அன்ளைப்புறக்கதவாயிருக்கக்கண்டு மிக்க சந்தோஷத்துடன் அதைதிறக்கப்போகையில் அது உட்புறத்தில் தாளிட்டிருந்தமையால் திறக்கப்படாமலிருப்பதைக்கண்டு என

செய்வது எனத்தியங்கி அங்கு நின்றுகொண்டிருந்தனள். இங்கு இவள் இங்ஙன மிருக்கையில், சாருதத்தனும் தனது நண்பனாகிய மைத்ரேயன் என்னும் விதூஷகனை நோக்கி, "ஓ! மித்திர மிடிமையின் கொடுமையை யான் என் சொல்வேன்! பார்! ஒருவன் முதலில் நல்குரவால் நனி வருந்திப் பின்பு செல்வமுற்றுச் சிறப்புடனுய்தல் நள்ளிருளில் இருப்பவனுக்கு ஒள்ளிய விளக்கொளிபோல் மிக்க ஆநந்தத்தை விளைவிக்கும். அங்ஙனமன்றி ஆதியில் அளவற்ற ஐச்வரியத்தை அநுபவித்துப் பின்பு மிடிமை யுறுதல் விளக்கு வெளிச்சத்திலிருந்து நள்ளிருளில் பிரவேசிப்பவனது நிலைமைபோல் மிக்க விசனத்தை விளைவிக்கும்," என்று இங்ஙனம பலவாறு புகன்று புலம்பவே விதூஷகனும், "சுவாமி, உதாரகுணமே உருவுற்றிருக்கின்ற தாம் செல்வமனைத்தையும் ஏழைகளுக்கும் தோழர்களுக்கும் கண்ட வாறு கைகொண்டமட்டும் வாரி இறைத்து வறுமையுற்றிருப்பதினால் தனது சோடசகலைகளில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு திதியிலும்தேவர்கட்களித்து மெலிந்திருக்கும் தேய் பிறைபோல் மிக்க பெருமையும்புகழு முறுவீர்கள்; ஆதலின் இதற்காகத் தாங்களேன் சோக முறவேண்டும்?" எனச் சாருதத்தனும்," அப்பா, மைத்ரேயா! இப்பொழுது யான் செல்வம் போய் விட்டதே என்று சோகிக்க வில்லை, ஆனால், முன்னம் நம் மில்லத்திற்கு விருந்துண்ணவந்த அதிதிகள் அனைவரும் இப்பொழுது எனது நல்குரவைக்கண்டு தூரவிலகிப் போகிறார்களே என்று நினைக்கையில் என் மனம் கொதிக்கின்றதே! என்செய்வேன்? என, விதூஷகன், ஆம், இப்பாழும் பொருட்குவை எப்பொழுதும் கிருபண சிரோமணிகளைத் தேடிச் செல்லுமே யொழியத் தங்களைப் போன்ற தாதாக்களிடம் நில்லாது என்றுசொல்லி அவனைத் தேற்றினான். பின்னர் சாருதத்தனும் தன்கிருக தேவதைகளுக்கு அந்திப்பூசை முடித்து சந்தியா வந்தனம் செய்து பிறகுவிதூஷகனை நோக்கி, "நேசா; யான் பூசைமுடித்தாய்விட்டது: நீ காளிகோயிலுக்குச் சென்று பூசைமுடித்துவா," என விதூஷகனும், இவ்வேளையில் இராஜபுருஷர்களும் விடர்களும் வீதிகள்தோறும் வேசியரைத்தேடித் திரிந்துகொண்டிருப்பார்கள். அங்ஙன மிருக்கையில் யான் அவர்கள் முற்பட்டால் பாம்பின் வாய்த் தேரைபடும் பாடுபடுவேன்

ஆதலால் யான் ஒண்டியாய் ஏகேன் எனவே, சாருதத்தனும், ஓகோ! நாம் வறுமையுற்றிருப்பதினாலல்லவோ நேசனும் நமது சொற்கேளாது நம்மை அலக்ஷியம் செய்கிறான். ஓ! வறுமையே! நீ சற்றேனும் என்னைப்பிரியாமல் நினது அன்பனைப்போல் கருதியிருக்கின்றனையே; யான்பாவி இறந்தபின் எவரைநாடிச் சேருவாய்என்பதே எனக்கு ஓர்கவலையாயிருக்கின்றது, என்று இங்ஙனம் வெகுமனச் சலிப்புடன் அறைந்தமொழியைக் கேட்டு மைத்ரேயனும், ஐயா அப்படியானால் எனக்கு சகாயமாக என்னுடன் கூட இந்த ரதனிகையை அனுப்புங்கள் செல்லுகிறேன்எனவே சாருதத்தனும் ரதனிகையை அவனுடன் அனுப்பினான். உடனே விதூஷகனும் எங்கும் காரிருள் மூடித் திக்குத்திசை தெரியாமலிருந்ததினால் கையில் ஒரு விளக்குடனும் காளிபூஜைக்கு வேண்டிய பதார்த்தங்களுடனும் ரதனிகையைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு பக்கத்துத் துவாரமுகமாக வருகையில் கதவுதாளிட்டிருந்ததைகண்டு தன்னிடமிருந்த விளக்கையும் பூஜைக்குரிய வஸ்துக்களையும் ரதனிகையிடம் ஈந்து தான் முன்னே கதவைத்திறந்தான். அக்கதவண்டையில் ஒண்டியிருந்த வசந்தசேனையும் கதவுதிறக்கப் பட்டதைக்கண்டு தனக்குள் மிக்க சந்தோஷத்துடன், உள்ளேநுழைய முயலுகையில் விளக்கு வெளிச்சத்தைக்கண்டு ஓகோ! விளக்குவருகிறதே என்செய்வது என்று தன்னுள் சற்றுயோசித்துக் கொண்டிருந்தனள். விதூஷகன் ரதனிகையினிடமிருந்த விளக்கை மீண்டும் தான் வாங்கிக் கொண்டு வாயிலைத் தாண்டி வருகையில் அங்கு சுவற்றோரமாய் ஒண்டியிருந்த வசந்தசேனையும் தனதுவஸ்திரத்தின் முன்றானையால் விளக்கை அணைத்து உள்ளே சென்று ஒளித்துக் கொண்டனள். உடனே விதூஷகனும் ரதனிகையைநோக்கி, ஓ! ரதனிகையே யான் கதவைத்திறந்துகொண்டு போகையில் காற்றுவந்து மோதி தீபம்நின்றுவிட்டது. நீ வீதியில் சற்றுதூரம் சென்றுகொண்டிரு; யான்மீண்டும் விளக்கேற்றிக்கொண்டு வருவல் என்றுரைத்து உள்ளே சென்றனன். ரதனிகையும் எங்கும் இருள்மூடியிருந்தபோதிலும் மெள்ளமெள்ள சற்றுதூரம் சென்றுகொண்டிருந்தாள். இக்கருணத்தில் வசந்தசேனையைத் தூக்கிக்கொண்டு வந்த

சகாரன்முதலிய மூவரும் அவளைக்காணுது இருளில் தனித்த ளி தேடிக்கொண டிருக்கையில் சகாரன் அங்குற்ற ரதனிகையை க்கெட்டியாகப் பிடித்துகொண்டு, அகப்பட்டுக்கொண்டாள் வே சிச்சிருக்கி; இதோ இவளைமயிரில் கைபோட்டு ஈர்த்துக்கொண டுவருகிறேன் பாருங்கள்! என்றுகூவிக்கொண்டு அவளை அவர்க ளிடம் ஈர்த்துக்கொண்டு போனன். (இன்னும்வரும்)

வியாசம்.

சதுர் யுகங்கள்.

பூர்வமுதல் காலத்தை நாள், மாதம், வருடம், யுகம், நூற் ருண்டு முதலியவற்ருல் அளவிடும்வழக்கம் கெடுகிலும் மனித ருக்குள்ளிருந்து வந்திருக்கிறது. அவற்றுள் சதுர்யுகங்கள் என அளவிடல் பரதகண்டமாகிய இந்து தேசத்திற்கே உரியதாம். இதற்கு விஷ்ணுபுராணத்தில் கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபா யுகம், கலியுகம் என்னும் நான்கு யுகபேதங்கள் பாரதவருடத்திலே யே யுண்டு, என்று வருவது சாட்சியாம். இந்து தேசத்தவரது ஜோதிடநூல் பூர்வஜோதிடம் உத்தரஜோதிடம் என்று இருவகை ப்படும். அவைகளுள் உத்தரஜோதிடநூலும் அதற்குரிய கணித சூத்திரங்களுமே இக்காலத்தவருக்குப் பெரும்பாண்மையும் தெரி ந்திருப்பதால் அவ்விதிகள் ஐரோப்பியரது ஜோதிட சூத்திரங் களோடும், காலவரையறைகளோடும் சிற்சில தருணங்களில் மாறு கொள்ளுதற்கு இடையாய் ஒருவரை யொருவர் எதிர்த்து விரோத மொழிகள் எடுத்துரைத்து இது நிசம் அது நிசம் என்று வாதாடுவ தற்கேதுவாகும்.

பூர்வ ஜோதிட நூலாராய்ந்தவர் யுகபேதங்களின் ஆதி யுற்ப த்தி இன்னதென்றும், அந்தப் பூர்வ யுகபேதங்களுக்கிசையவே இதிகாச நூலகளில் அடங்கிய பூர்வ சங்கதிகளுக்குக் காலவரை யறை ஏற்பட்டதென்றும் அறிவது மன்றி, ஐரோப்பியரது கணி

11

சமும் அதற்கு ஒத்து வருகிறதென்றும் கண்டறிவர். ஜோதிட சாஸ்திர சிரோமணியாகிய (Mr. Bentley.) பென்றிலி என்பவர் இவ்வகை ஆராய்ச்சி செய்ததன்பின் சதுர் யுகபேதங்களை வகுத்து அவைகட்குரிய ஆதாரவிதிகளை அடியில் வருகிறபடி விரித்துரைக்கின்றார்.

"பரதகண்டமாகிய இந்து தேயமே ஜோதிட நூலுக்கு உற்பத்திஸ்தானம். அத்தேசத்தில் 27 நட்சத்திரங்களும் முதன் முதல் ஏற்பட்டு அவைகளை ஊடறுத்துச் சந்திரன் தன் அயனத்தில் செல்லும் கதியை தக்கனுக்குப் பிறந்த 27 கன்னிகைகளோடு உருவகப்படுத்திக் கூறினர். இப்படி கி. மு. 1528-ம் வருஷத்திற்கும் 1371-ம் வருஷத்திற்கும் இடையில் நடந்தது. கி. மு. 204-ம் வருஷத்திலிருந்த ஜோதிட வல்லோர் சிலர் யுத்தி செய்து வைவசுவத மனுவின் காலத்திலுண்டான பிரளயகால முதல் தங்கள் கால பரியந்தம் சென்ற வருடங்களை நான்கு யுகங்களாகவேணுமென்று நினைத்து வியாழன் எனும் கிரகமும், சூரியனும் தங்கள் காலத்திற்கு முன் முதன் முதல் எப்போது யோக நிலையில் வந்ததென்று கண்டு அதற்குக்கலியுக மென்றும் அதற்கு முன்னுள்ள நிலையை துவாபரயுகமென்றும், அதற்கு முன்னுள்ளதைத் திரேதாயுகமென்றும், அதற்கு முன்னுள்ளதைக் கிரேதாயுகமென்றும் கூறினர். இதற்கிசையவே இராமர் திரேதாயுகத்திலிருந்ததாக இந்துக்கள் சொல்லுவதும், அவர் சுமார் 3000 வருடங்களுக்கு முன் இருந்ததாக ஐரோப்பியர் கூறுவதும் ஒத்து வரும். குருபரிதியோகத்திற்கிசைந்த சதுர்யுகங்களுக்குரிய காலவளவைக் காட்டும் அட்டவணை வருமாறு:

4-வது. கிரேதாயுகம்—கி. மு. 2352-ம் வருஷம் ஏப்ரல்மீ 19உ துவக்கம்.

3-வது. திரேதாயுகம்—கி. மு. 1528-ம்வருஷம் அக்டோபர்மீ 28உ துவக்கம்.

2-வது. துவாபரயுகம்;—கி. மு. 901-ம் வருஷம் செப்டெம்பர்மீ 15உ துவக்கம்.

1-வது. கலியுகம்—கி. மு. 540-ம் வருஷம் பெப்ருவரிமீ

8உ துவக்கி, கி. மு. 299-ம் வருஷம் ஜுன் மீ 26உ முடிந்தது.

கி. பி. 51-ம் வருஷத்தில் இந்துக்கள் அதி பூர்வ நிலையைத் தோற்றுவித்தற் பொருட்டு, சனி பரிதியோகத்தால் ஏற்பட்ட சதுர்யுகக்காலவளவையும், அதற்குப் பிறகு மனுவந்தரங்களும், கற்பகாலங்களும் ஏற்பட்டு உத்தர ஜோதிடம் விர்த்திபெற்றகாலத்தில் மேற் கூறிய காலவளவைகள் மறைந்து நிசம் புதைபொருளாவதற்கிடையுண்டாயிற்று. குரு பரிதியோகத்தால் ஏற்பட்ட யுகபேதங்களின் காலவளவையை ஞாபகத்தில் வைப்பதால் இதிகாச ஆராய்ச்சி செய்வோர்க்கு அதிக பயனுண்டாகுமென்பதற்கு ஐயமில்லை; இதற்கொரு திருஷ்டாந்தம் எடுத்துரைப்போம். தமிழ் வேதங்களில் ஒன்றாக மதிக்கப்படும் நாலாயிரப் பிரபந்தத்துள் அடங்கிய "திருவாய்மொழி" எனும் சிறந்த வேதநூலைப் பூர்வ ஆரியத்தை யொட்டிப் பேச்சுப் பாஷையாக விளங்கிய தமிழ்ப் பாஷையிலெழுதி நிலைபெறச் செய்த நம்மாழ்வார் என்பவர் காரிமாறனுக்குப் பிள்ளையாய் கலியுகம் பிறந்த நாற்பத்து மூன்றும் நாளில் அவதரித்ததாகச் சொல்லப்படுகிறது. இங்ஙனம் கலியுகமென்பதை உத்தர ஜோதிடத்திற் கிசைய உரைக்கின் இப்போது நம்மாழ்வார் பிறந்து 4987-வருஷங்களாகுமே; இது அசாத்தியமென்று தற்கால கணிதசாஸ்திரிகள் எவரும் சுலுவில் கண்டறிவர். ஆனால் பூர்வ ஜோதிடப்படி கணித்துப் பார்க்கின் நம்மாழ்வார் பிறந்தது கி. மு. 540 வருஷமாதலால், அவர் அவதாரம் செய்து இப்போது 2425 வருஷங்களாயிற்றென்று கண்டுணரலாம்.

"இல்லொழுக்கம்."

ஸ்ரீவைணவதினசரி.

"பதிப்புரை"

இஃது, ஸ்ரீ வேதாந்த தேசிகர் தமிழில் பாடல்களாய்ச் செய்தருளிய பத்தொன்பது காதைகளில் அமைந்து கலிவிருத்தங்களாய் விளங்கும் ஒன்பதாவது காதை.

இவ்வறத்தில் நிற்பவர்க்குத் தினந்தோறு மின்றியமையாத ஐந்து கால விதிகளை பலஸ்ம்ருதிகளிலிருந்தும் வேறு நூல்களிலிருந்தும் ஒருவாறு தொகுத்து இந்நூலாசிரியர் கூறினார்.

கால கதியால் வடமொழியில் பயிற்சிகுன்றி சன்மவழி, நிலைகுலையு மென்பதை யெண்ணித் தமிழ் வழியாலேனும் பிற்காலத்தவர்க்கு மிகுதியும் பயன் படும்படி யிக்காரிகையை வடகலையொடு தென்கலையையும் முற்று முணர்ந்து கவிவாதி சிங்கமாய் விளங்கிப் பல நூல்கள் செய்து புகழுடம்பு கொண்டோங்கும் ஸ்ரீ வேதாந்த தேசிகர் உபகரித்திருந்தும் அது பலர்க்கும் பயன் பட[illegible]து தமிழெனுஞ் சிமையிற் சுற்றி மணிப்பவள உரையெனு[illegible] பேழையில் வைத்துள்ள மாணிக்கம்போன்றிருத்தலால் விருத்தி யுரை யென்னுந் திறவு கோல் கொண்டந்த மாணிக்கத்தை வெளிய லெடுத்து வைக்கவெத்தனித்தேன். காணப்பயலிருப்பினும் அத ன் தன்மையை யறிந்து ஆநந்திக்கு மநுபவிகளே அதன் ஒளிச் செறிவை ஆராய்ந்து பார்த்து விலைமதிக்கும் மகான்களாவர் அவர்களடிப்போதை எப்போது மறவாது திருப்போமேனல் யான் செய்த விருத்தி யுரையுந் திருத்தவுரையாம். நூல் கற்கும் செ[illegible]யில் உரை செய்தலிலே சிறந்ததெனக் கொண்டதன்றி வேறன்று.

அறுசீர்க்கழிநெடி லாசிரியம்.

உரை செய்தார் பலரெனினு மாரியத்துந் தமிழ்கத்து
முன்மை காட்ட
விரை செய்தா ரரிபதத்தி லன்புமிக்க காலகதி
வேண்டித்தேன் சொல்
லுரை செய்தார் பயன் பெறுமென் புன்கல்வி யென்பதெணி
யுரைக்கலுற்றேன்
கரை செய்தா ருலகிலெவர் கல்வியெனுங் கடல்கறுர்க்குக்
கலைவல்லோரே.

உதகமண்டலம்.

இங்ஙனம்
தில்லையம்பூர் வெங்கடராம ஐயங்கார்

(முகவுரையும் விருத்தியுரையும் இனித்தொடரும்)

"பதினெண் கணக்கு."

கல்வியில் வல்ல பண்டிதர்காள் மதுரையில் வீற்றிருந்த சங்க[illegible]

ர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்கள் காலத்து வழங்கி பதினெண் கீழ்க்கணக்குகள் எவை? ஐந்தொகையிற் சேர் ஐந்து நூல்கள் எவை? இதனை திராவிட ரஞ்ஜனி மூலமாய்ப் க்கும் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வெண்பா.

நாலடி நான்மணி நானாற் பதைந்தொகை
பால்கடுசெவ் கோவை பழமொழி மாமூலம்
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பதுஉங்
கைந்நிலையவாங்கீழ்க் கணக்கு.

இங்ஙனம்

தகமண்டலம்
20–11–86

இயற்றமிழ்க்குழைப்போன்
தில்லையம்பூர் வெங்கடராம ஐயங்கார்.

கண்ணும் ஒளியும்.

கல்விகற்கும் பிள்ளைகளும், மற்றவர்களும், பின்வரும் விஷங்களைக் கவனித்தால் கண்களுக்கு யாதொரு கெடுதியும் வராதென்று டாக்டர் லண்டி (Dr. Lundy.) துரை சொல்லுகிறார்.

1. சொற்ப வெளிச்சமுள்ள விளக்கினிடத்து படிக்கலாகாது.

2. உடம்பு இளைப்பாயிருக்கும்பொழுதும், ஓர் நோயிலிருந்து தேகம் சௌக்கிய மடைந்துகொண்டிருக்கும் பொழுதும் படிக்கலாகாது.

3. படுத்துக்கொண்டிருக்கும் பொழுது படிக்கலாகாது.

4. புஸ்தகத்தை அதிகநேரம் ஒரேவிசை பாராமல் இடையிடை கண்களுக்குச் சற்று ஓய்வுதரவேண்டும்.

5. ஓர்புஸ்தகத்தை வாசித்தலும், வாசித்ததை யோசிப்பதும் ஒருமுறைபாடுடன் நடத்தவேண்டியது.

6. குனிந்துகொண்டு வாசிக்கும் வழக்கத்தை விட்டு விடவேண்டும். ஏனென்றால் முகத்திலும், தலையிலும் இரத்தம் அபரிமிதமாய் வரும். நிலைமையில் வாசித்தலாகாது.

7. நன்றாய்ச் சிறந்த அட்சரத்தில், பதிப்பித்த புஸ்தகத்தை வாசிக்கவேண்டும்

வர்த்தமானம்.

மாட்சிமை தங்கிய ராஜப்பிரதிநிதியாகிய டப்பிரின் பிரபு அவர்கள் சென்ற மாசம் புதுச்சேரிக்குப் போயிருந்த போது பிராஞ்சு கவர்னர் ஜனரல் அவர்களைப் பார்த்து "நீங்கள் துரைத்தனம் நடத்தி வரும் முறையை நான் கவனிப்பதால், நான் துரைத்தனம் நடத்த வேண்டிய முறையைப் பற்றிச் சிலவற்றை அறிந்து கொள்ளலாமென்று எண்ணுகிறேன்" என்று சொன்னார்களாம். இதைப்பற்றிச் சந்திர நகர் பத்திரிகை ஒன்றில் சொல்லியிருப்பது யாதெனில் "கவர்னர் ஜனரலவர்கள் துரைத்தன முறையைப்பற்றியறியப் புதுச்சேரிக்குப் போகாது, கிருபை கூர்ந்து நம்முடைய ஆபீசுக்கு வந்திருப்பார்களானால் மூன்று விஷயங்கள் அறிந்திருக்கலாம்:— அவை எவை யெனில், (1) குடிகொன்று இறைகொண்டு, கொண்ட வரியை வாரி விணில் இறைத்து சீவில் மிலி[illegible] காரியாதிகளை நடத்தாமல், துரைத்தன விஷயங்களை நன்[illegible] எடுத்து முடிப்பது கூடும் என்றும், (2) அந்நிய ரா[illegible]ங்கத்தார், சுதேசக் குடிகளுக்குத் தங்களுக்கொத்த உயர்[illegible] உத்தியோகங்களைக் கொடுக்கிறோம், கொடுக்கிறோம் என்று வாயினாலே மட்டுஞ் சொல்லாமல் உத்தியோகங்களைக் கொடுத்தே துரைத்தனம் நடத்துவது கூடும் என்றும், (3) கோர்ட்டு வியகாரங்களில் முத்திரைச் செலவிலேயே, ஏழைகள் குடிமுழுகிப் போகத்தக்கதாகச் சட்டம் ஏற்படுத்தி இவ்விதமாய்த் தனவான்களுக்கு ஒரு வகையான நீதியும் ஏழைகளுக்கு மற்றொரு வகையான நீதியுமாக நியாய தர்மத்தை விலை கூறி விற்கிறதை விட்டு, சமன் செய்து சீர்தூக்குங் கோல் போல நடுவு நிலைமை தவறாமல் செங்கோல் செலுத்துவது கூடும் என்றும் கற்றிருக்கலாம்." என்று சொல்லியிருக்கிறது.—*The Beaver.*

நமது ராஜப்பிரதிநிதியாகிய மாட்சிமை தங்கிய டப்பிரின் பிரபு அவர்கள் ஸ்ரீரங்கத்திற்கு விஜயஞ் செய்து அங்குள்ளவற்றை

பார்த்துவிட்டு ஸ்ரீரங்கமேலாசித்தில் அருகிருக்கும்போது ஸ்ரீரங்
பகார த ஜீயர்சுவாமியவர்கள் அவர்களைக்கண்டு பலவாறுக
பின் அந்தஸ்வாமிகள் அந்தப்பிரபுவைநோக்கி பிரபுவே!
த்தில் துரைத்தனத்தார் தேவாலயங்களை முன்போல
டம் வைத்து விசாரணைசெய்து வராமையால் பற்பலவாகிய
குறைவுகள் சம்பவிக்கின்றனவென்றும், ஆதலால் முன்போ
துரைத்தனத்தார் நேரில் வைத்து விசாரித்து விமர்சையாய்
வராவிடில் இன்னும் சீர்குலையுமென்றும் மொழிந்து கபத்து
த வெளியிட்டார்கள். சுவாமியார் சொல்லியவற்றையெல
ராஜப்பிரிதிநிதியார் கேட்டு ஆநந்தித்ததாக தோற்றினமை
ஜீயர் சுவாமிகள் திருவுள்ளமுவந்து அவரைநோக்கி, பிரபு
தங்கள் பெருந்தன்மையைக்கண்டு பேராநந்தங்கொண
தங்களிடத்திலுள்ள உத்தம குணங்களைக் காண்கையில்
கருணையங் கடவுளாகிய ஸ்ரீகண்ணபிரானின்து குணங்க
ங்களிடத்தும் குடிகொண்டிருக்கின்றனவென்று தோற்றுகின்
அஃதெவ்வாறெனில் எங்கள் கண்ணமூர்த்தியானவர் சதா
காவனத்திலே சரிப்பவர்; தாங்களோவெனில் பெரியோர
ங்களைப் பாதுகாப்பதிலேயே எப்பொழுதும் அவாவுற்றிருக்
றீர்கள் என்றார். சுவாமிகள் பின்னும் அவ்வரை நோக்கி பிரபு
மற்றொருவகையாலும் எங்கள் கண்ணபிரானுக்கு உவமையா
க்கின்றீர்கள் என, பிரபு அஃதெங்ஙனமென்று ஆவலோடுவி
, பிரபுவே! எங்கள் கண்ணபிரான் சத்தியபாமையோடு எப்
ழுதும் அகலாது கூடியிருக்கின்றார். தாங்களோவெனில் (சத்தி
உண்மை, (பா) ஒளிவு (ம) செல்வம் இவற்றோடு கூடியிரு
க்கிறீர்களென்று சிலேடையாய் திருவாய் மலர்ந்தருளினார். இவ
றையெல்லாம் கேட்ட பிரபுஅவர்கள் பேராநந்தங்கொண்டு,
மிகளே! தேவரீர்களுக்கு இப்பொழுது திருநட்சத்திரம் எத்
யாயிற்றென, அவர்கள் அறுபத்திரண்டென, பிரபு அப
பானல் நாமிருவரும் சமவயதுடையவர்களாதாரென்றார். அ
பிறகு ஜீயர்சுவாமியவர்கள் அவர்களுக்கு மாலையிட்டு பரிசா
கள் செய்ய, பிரபுவும் சந்தோஷமாகங்கொண்டு அவர்களுக்குப் பல
ண்டு கூறிச் சென்றார்.

விளம்பரம்.

திராவிட ரஞ்ஜனி.

இஃது

நீதி, பூர்வசரித்திரம், விநோத கதைகள் முதலிய விஷயங்களைக் கொண்டிருக்கிற மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

கையொப்பவிகிதம்.

	உள் நாட்டாருக்கு.	வெளிநாட்டாருக்கு தபால்சார்ஜு உள்பட.
வருஷம் ஒன்றுக்கு	ரூ 1 8 0	ரூ 1 14 0
ஆறுமாதங்களுக்கு	0 12 0	0 15 0
மூன்று ஷை	0 6 0	0 7 6

அறிவித்தல்களை அச்சிடுவதற்கு வரி ஒன்றுக்கு 6 பைசா.

குறிப்பு:— கையொப்பம் முதலியவை முன் பணமாகவே அனுப்பவேண்டும். 3 மாஸங்களுக்கு குறைந்த கையொப்பம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

நிருபசிரேஷ்டருக்கு அறிக்கை.

எம்பத்திரிகைக்கு தேசோபகாரமாக பொது நன்மைக்குரிய விஷயங்களையும், புதின சம்பவங்[…]ம் எழுதியனுப்ப அபேட்சிப்போர், ஜாதி, மதவாததூஷணை முதலிய[…]டமாகாமலும், பத்திரிகையை வாசிக்கும் நேசர்கள் மகிழும்படி[…] செந்தமிழ் நடையில் அரும்பத கடினசந்தியில்லாமல் உயர்தர[…]; சொன்னயம், பொருணயம்பட உபயோகித்தும், சமாசாரங்க[…]தமூன்றும் சுருங்கக்கூறியும் நயம்பட வரைந்து அனுப்பினால் யா[…] நன்றி பாராட்டுவதுமல்லாமல், அப்பேர்ப்பட்ட தேசாபிமான மி[…]ய எமதன்பர்கட்கு எம்பத்திரிகை இனாமின்றி அனுப்பப்படும்.

☞ பத்திரிகைக்கு கையொப்பம், அறிவித்தல்கள், அ[…] வேண்டிய பிரதிகள், நிருபங்கள் முதலியவைகளை இதனடியில் கைசி[…]ப்பமிட்டிருக்கிறவர் பெயருக்கே அனுப்பவேண்டியது.

தி. வீ. வெங்கட்[…]யலு ந[…]யுடு,

ரிப்பன் பிரஸ்,

திரிசிரபுரம்,

தெப்பக்குளம்.

முக்கியமான அறிவிப்பு.

இப்பத்திரிகையைப்பெற இஷ்டமுள்ளவர்கள் நாளது ஜனுவரி மீ 22உ க்குள் கையொப்பத் தொகையை அனுப்பினால் பத்திரிகை தொடர்ச்சியாய் அனுப்பப்படும்.



76